உ

# திருக்கோணமலை – பாலையூற்று
# அருள்மிகு ஸ்ரீ பால சுப்பிரமணியப் பெருமான்
# சித்திரத்தேர் வெள்ளோட்டம்



## சிறப்பு மலர்

**காலம் 2022.01.18**

வெளியீடு
பாலையூற்று அருள்மிகு ஸ்ரீ பால சுப்பிரமணியப்
பெருமான் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாலமுருகன் துணை

திருக்கோணமலை பாலையூற்று

அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான்



# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

# சிறப்பு மலர்

## காலம் : 2022.01.18



வெளியீடு

பாலையூற்று அருள்மிகு

ஸ்ரீ பால சுப்பிரமணியப் பெருமான்

தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருமலை மாவட்டத்தில் பாலையூற்று என்னும் கிராமத்தில் முருகன், வள்ளி, தெய்வானை சமேதராக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வண்ணம் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் வருடம் தோறும் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கும் முகமாக கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரை எல்லா ஆலயங்களிலும் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் இரதோற்சவம் அதிசிறப்பு வாய்ந்தது. இரதோற்சவத்தினால் கோவில் சுற்றாடல், கிராமப்புறங்களில் தீய சக்திகள் அழிக்கப்பட்டு மக்களுக்கு லக்சுமி கடாட்சம், நல்வாழ்வு, அருளாசிகள் போன்றவை கிடைக்கின்றன.

இவ்வருடம் பாலையூற்று முருகன் ஆலயத்தில் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்டமாக பவனி வரப் போகின்றது. இக்கண்கொள்ளாக் காட்சியைக் காண மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆலய இரத வெள்ளோட்ட வைபவம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளாசி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இச்சித்திரத்தேரை வடிவமைத்த ஆசாரியாருக்கும் பத்திரகாளி அம்பாள் அருள் புரிவாராக.

**இவ்வண்ணம்**

**சோ.இரவிச்சந்திரக் குருக்கள்**

**(சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்**

**ஆலய ஆதீன கர்த்தா, பிரதமகுரு**

**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவ பிரதமகுரு ஆசியுரை

**வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை குகன் உண்டு குறைவில்லை.**

இலங்கை திருநாட்டில் தெட்சணகைலாசம் என போற்றி துதிக்கப்படும் திருக்கோணமலை பகுதியில் பாலையூற்று எனும் பதியில் கோயில் கொண்டு அடியாரை காக்கும் பொருட்டு அருள் ஆட்சி புரியும் ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் புதிதாக பல இலட்சம் ரூபா செலவில் சித்திர வேலைப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட சித்திரதேர் வெள்ளோட்டவிழா நடைபெற உள்ளதையிட்டு பெருமகிழ்வு கொள்வதுடன் இத்தேரினை முன்னின்று உருவாக்க பாடுபட்ட ஆலய பரிபாலன சபையினருக்கும், திருப்பணிக்கு பண உதவிகளை வழங்கிய அடியார்களுக்கும் இதை செய்தே தீர வேண்டும் என பெருமுயற்சி எடுத்த முன்னைநாள் பரிபாலகர் அமரர்.திரு பாக்கியராசா அவர் குடும்பத்தாருக்கும் முருகப் பெருமானின் பரிபூரண திருவருள் கிடைக்கவும் வேண்டுகின்றேன்.

இத்தேர் உற்சவத்தின் பலனாக அடியார்கள் மனங்களில் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கி பேரின்ப பெருவாழ்வு வாழ பாலமுருகனின் திருவடிகளை வேண்டி ஆசி கூறுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கின்றேன். மென்மேலும் இவ் ஆலயம் சிறக்கவும், விழாக்கள் இனிதே நடைபெறவும், அடியார்கள் வேண்டிய வரங்கள் பெற்று வாழவும் பிரார்த்தித்து மேலும் இவ் ஆலய விழாவில் எனது பரிபூரணமான பங்களிப்பினை நல்குவேன் எனவும் முருகன் திருவடி வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

என்றும் இறைபணியில் உண்மையுள்ள
பிரதிஷ்டா பிரதம குரு
வேதாகம வித்யாபதி ஷாஹித்திய பாஸ்கரன்
தேசமாண்ய சிவஸ்ரீ குமார விக்னேஸ்வர குருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய குருவின் ஆசியுரை

பல வருட காலமாக இவ் ஆலயத்தில் முருகப்பெருமானுக்கு பூசை செய்யும் பாக்கியம் பெற்ற பெருமையுடைய நான் இவ் ஆலயத்தில் எம்பெருமானுக்கு சித்திரத்தேர் இல்லாத குறையை எனது அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய திரு. பாக்கியராஜா ஐயா அவர்களிடம் கலந்து ஆலோசித்த போது கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னராக திரு. பாக்கியராஜா ஐயா தலைவர் அவர்களின் முயற்சியிலே எமது ஆலயத்தின் சித்திரத்தேர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. தேர்வேலை நடைபெற்று வந்த தருணம் அவரின் சுகவீனம் காரணமான பிரிவு எங்களை தவிக்கவிட்டது. பின் தற்போதைய நிர்வாகம் தலைவர், திரு. ராஜேந்திரன், பொருளாளர் சதீஸ், செயலாளர் கபிலன் அவர்களின் விடாமுயற்சியால் பாலையூற்று அனைத்து மக்களும் ஒன்றிணைந்து இந்த வருடம் எமது ஆலயத்துக்குரிய சித்திரத்தேரை நிறைவு செய்து விட்டனர். இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பாக்கியராஜா ஐயா அவர்களின் குடும்பத்தாருக்கும் மற்றும் பாலையூற்று அனைத்து மக்களுக்கும் எம் பெருமானின் ஆசி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து மேலும் இவ்வாலயம் வெகு சீக்கிரத்தில் பெரியதோர் ஆலயமாக வளர வேண்டும் என எல்லாம் வல்ல முருகப்பெருமானை போற்றி வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்
ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ சி. ஸ்ரீகுகன்சர்மா
077 3236130

சுமேதகம
திருக்கோணமலை
12.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தென்கைலை என போற்றப்படும் திருக்கோணமலையில் பாலையூற்றுப் பகுதியில் கதிர்காமக்கந்தனின் அருள்சக்தியோடு அடியார்களுக்கு அருள் வழங்கிக் கொண்டிருக்கும் பாலசுப்ரமணியப் பெருமானுக்கு ஒரு தேரடிச் சிந்து தேவையென ஆலய பரிபாலன சபை தலைவரும் முருகன் அடியவரும் இறைபணிச் செம்மலும் ஆகிய அமரர் உயர் திரு.ச.பாக்கியராஜா அவர்கள் கேட்டுக் கொண்டதன் படி தேரடிச் சிந்தும் காவடிப்பாடலும் எழுதப்பட்டு 2016.05.20 இல் நூலாக வெளியீடு செய்யப்பட்டது. அதன்பின் 2018 ஆம் ஆண்டு இந்தியாவில் தலை சிறந்த ஆன்மீக அருளாளர்களால் சத்குரு சங்கார ஞானவேல் கொண்டு வரப்பட்டு அபூர்வ மூலிகைகளாலும், அற்புத தீர்த்தங்களாலும் வேத விற்பனர்களால் அபிஷேகம் நிகழ்த்தப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதை அனைவரும் அறிவர்.

பல அற்புதங்களும் அருட்சக்தியும் நிறைந்த பால தண்டாயுத பெருமானுக்கு ஒரு சித்திரத்தேர் தேவையென அமரர். பாக்கியராஜா அவர்களின் பெரும் முயற்சியாலும் இன்றைய ஆலய பரிபாலன சபை தலைவர், செயலாளர், பொருளாளர், இளைஞர்கள், அன்பர்கள், அடியார்கள் அனைவரது ஒத்துழைப்புடனும் இனிதே நிறைவேறி கடந்த 2020 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போதும் நாட்டில் ஏற்பட்ட நோய்த்தொற்றின் வீரியம் காரணமாக பிற்போடப்பட்டு இவ்வருடம் நடைபெறுவதற்கு இறையருள் கிடைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. பாலசுப்ரமணியப் பெருமானின் திருப்பணிகளிலும், தேர்ப்பணியிலும் ஓயாமல் உழைத்து தொண்டாற்றி வரும் ஆலய பரிபாலன சபையினரும் அனைத்து அடியார்களும் எம் பெருமானின் திருவருளைப் பெற்று சீரோடும், சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமோடு வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்

என்றும் இறைபணியில் மகிழ்வுறும்

கவிஞர், சோதிடர் வி.சிகண்டிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பால முருகன் ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இவ் ஆலயமானது கதிர்காமத்திற்கு நடைபாதையாக தலயாத்திரை செல்லும் அடியார் ஒருவரினால் கதிர்காமத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட வேலினைக் கொண்டு 1968 ஆம் ஆண்டளவில் வாகை மர நிழலில் சிறு குடிசையில் ஆரம்பிக்கப்பட்டதே இக்கோயிலாகும்.

இவ் ஆலயத்தின் ஆரம்பகால பூசகராக திரு.கதிர்காமத்தம்பி (சாமியாரப்பா) அவர்கள் பெருந்தொண்டு ஆற்றினார். அதனை தொடர்ந்து அமையப்பெற்ற நிர்வாக சபைகளின் பெரும் முயற்சியால் இவ் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகம் இடம்பெற்று அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்தது.

தொடர்ந்து இரண்டாவது கும்பாபிஷேகம் 2005 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இக்கும்பாபிஷேகத்திற்கு பிற்பாடு இவ்வாலயம் மகோற்சவ ஆலயமாக வளர்ச்சி பெற்றது. இதனைத் தொடர்ந்து மூன்றாவது கும்பாபிஷேகத்திற்கான பாலஸ்தாபனம் 2016 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறிப்பிட்ட 3 மாத காலத்துக்குள் பல திருத்த வேலைகளை செய்து கும்பாபிஷேகத்தை நிறைவு செய்து பல ஆலயங்களுக்கு முன் உதாரணமாக திகழ வைத்தார். அமரர்.ச.பாக்கியராசா அவர்கள் அவருக்கு இதனை நிறைவு செய்ததற்கு இப்பகுதி வாழ் மக்களும் இளைஞர்களும் பேருதவி புரிந்தனர்.

இதனைத் தொடர்ந்து வேல் கொண்டு ஆரம்பித்த இவ்வாலயத்தில் வேலவப் பெருமானுக்கான ஆலயத்தை 2018 ஆம் ஆண்டளவில் அமைத்து இவ்வாலயத்தை நாடறிய செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அமரர்.ச.பாக்கியராசா அவர்கள் இவ்வாலயத்தில் சித்திரத்தேர் ஓடும் அவாவின் வெளிப்பாடாக சித்திரத்தேருக்கான வேலைகளை 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின் தற்போதைய நிர்வாக சபையினரால் சித்திரத்தேர் வேலைகள் நிறைவு பெற்று கிராமப் புறங்களிலேயே சித்திரத்தேர் ஓடும் ஆலயமாக இல் ஆலயம் வளர்ச்சி பெற்றுள்ளது.

இவ் ஆலயத்தின் இவ்வாறான வளர்ச்சிக்கு இப் பகுதி வாழ் மக்களும், இளைஞர்களும், பல நிர்வாகசபையும் பெரும் பங்காற்றியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

தேவார முதலியாரினால் பாடப்பெற்ற ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேச்சரப் பகுதியிலே இயற்கை எழில் கொஞ்சும் பாலையூற்று கோவிலடி கிராமத்தில் அனைவராலும் சின்னக் கதிர்காமம் என போற்றப்படுகின்றன. ஸ்ரீ பால முருகள் ஆலயத்தில் இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம்.

கிராமப்புறங்களிலேயே சித்திரத்தேர் ஓடும் ஆலயமாக எமது ஆலயம் வளர்ச்சிபெற வேண்டும் எனும் அமரர்.ச.பாக்கியராசாவின் கனவிற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டு அமரர்.ச.பாக்கியராசாவின் மன உறுதியின் வெளிப்பாடாக வேலவப் பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வின் போது சித்திரத்தேருக்கான அடித்தளம் இடப்பட்டது.

அன்னாரின் மறைவுக்குப் பின் நிர்வாகத்தை பொறுப்பேற்ற தற்போதைய நிர்வாகத்தாலும், பொதுமக்களினாலும் மேற்கொள்ளப்பட்டபெரும் முயற்சியினால் இச்சித்திரத்தேர் வேலைகள் நிறைவு பெற்று இன்று வெள்ளோட்டம் காண்கின்றது.

இச்சித்திரத்தேர் வெள்ளோட்டம் காணும் இந்நேரத்தில் இச்சித்திரத் தேரினை உருவாக்கியே தீர வேண்டும் என்று மன உறுதியுடன் செயற்பட்ட அமரர்.ச.பாக்கியராசாவிற்கும் இத்தேரினை வடிவமைத்த ஸ்தபதி இ.கலைச்செல்வன் (காளிகோவிலடி - திருநெல்வேலி - யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் நிதியுதவிகளை வழங்கிய அனைத்து பொதுமக்களுக்கும் இவ் வெள்ளோட்ட நிகழ்வின் போது எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அனைவருக்கும் எல்லாம் வல்ல எம்பெருமானின் அருள் கடாட்சம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

ஆலய நிர்வாகசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

## பாலையூற்று
## அருள்மிகு பால சுப்பிரமணிய சுவாமி

# திருவூஞ்சல்

எண்ணிய எண்ணமெல்லாம் என்றுமே இடையூறின்றி
நண்ணியே அருள்பாலிக்கும் நாதனாங் கோணை வெற்பன்
பண்ணொடு இசையுங் கூட்டும் பாவினால் ஊஞ்சல்பா
கண்ணுதல் உடையோன் நல்கும் கணபதி காப்பதாமே.

### ஊஞ்சல்

காலையிளங் கதிர்பரப்பி ஞாலம் உய்யக்
கருணையொடு பரிதியொளி பரவிச் சூழும்
சோலைகள்சேர் திருப்பதியாம் பாலையூற்றில்
சுந்தரநற் கோவில்மணி மண்டபத்தே
நீலமயில் வாகனனார் ஊஞ்சலாட
நினைந்தடியார் இயற்றுதிரு ஊஞ்சல்மீதே
கோலமுறு பாலையாம் பதியில் வந்த
பாலசுப்பிர மணியரே ஆடீருஞ்சல்

சதுர்வேத பவளக்கால் நான்கின் மீதே
சாற்றுமோ ராறங்க விதானமேற்றி
புதுமைசெறி புராணமெனும் பட்டுக்கட்டி
போற்றும் ஆகமங்களெனும் மாலை தூக்கி
பொதிகைமுனி அகத்தியனார் போற்றுகின்ற
புத்தமுத முத்தமிழாம் வடங்கள் தாங்கும்
பதுமமெனப் பொற்பலகை மீதமர்ந்து
பாலசுப்பிர மணியரே ஆடிரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையணி வேணியுடைக் கடவுள் எம்மைக்
காத்தருள வென்றுன்னைக் கருணையோடு
பங்கமிலா நெற்றியுறு கண்ணில் தந்த
பாலமுரு கேசனே பவள மேனி
செங்கதிர்போல் திகழவொரு கையில் வேலும்
சேர்த்திங்கு அபயகரம் காட்டி ஆளும்
எங்கள் குலக் குருமணியே முதல்வர் பாலை
பாலசுப்பிரமணியரே ஆடீரூஞ்சல்

அந்தர துந்துபி முழங்க அமரர் வாழ்த்த
ஆதவனும் மாதவனும் அரனும் வாழ்த்த
இந்திரனும் சந்திரனும் அயனும் வாழ்த்த
ஏழிசையால் கந்தருவர் இனிது வாழ்த்த
மந்திரநூல் மறையவர்கள் வேதமோதி
மாமலர்கள் தூவியுனை மகிழ்ந்து வாழ்த்த
பந்தமகல் மெய்யடியார் பாடி வாழ்த்த
பாலசுப்பிர மணியரே ஆடீரூஞ்சல்

அரியதவம் இயற்றியரன் அருளினாலே
ஆயிரத்தெட் டண்டமெல்லாம் ஆண்டசூரன்
பெருவலியோன் சிங்கனொடு தாரகனுமற்றும்
பேரான போராளி பானுகோபன்
வெருவிடவே போர்செய்து வென்ற தேவா
வெற்றிவடி வேலவனே வினைகள் தீர்க்கும்
பெரியபரம் பொருளேயிப் பாலையூற்றின்
பாலசுப்பிர மணியரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமொடு வைநெறி விளங்கி ஓங்க
வேறுபல மதங்களுமே விரைந்து பொங்க
மாதவரும் மக்களுமே மகிழ்ந்து பொங்க
மானிடரும் வாழ்க்கையிலே மகிழ்ந்து ஓங்க
தீதகலத் திருநீற்றின் ஒளியும் ஓங்க
தெய்வமணங் கமழ்ந்தெங்கும் செறிந்து பொங்க
ஏதமறுத் தெமையாளும் ஈசா பாலைப்
பாலசுப்பிர மணியரே ஆடீரூஞ்சல்

சுந்தரநல் வைரமணி பூணுமாட
சொல்லரிய பொன்மடம் துளங்கியாட
கந்தமலி கடப்பமலர் மாலையாட
கன்னியருங் காளையருங் களித்தேயாட
செந்துவர்வாய் வள்ளிதெய்வ யானையோடு
சேந்ததினிலே ஊஞ்சல்மிசை இனிதமர்ந்து
எந்தரமும் எமையாளும் இறைவா எங்கள்
பாலசுப்பிர மணியரே ஆடீரூஞ்சல்

ஆறுபடை வீடுடைய ஐயா எங்கும்
ஏறுமயில் ஏறிவிளை யாடும் ஈசா
மாறுபடு சூரனுடல் மடியச் செய்து
மாமயிலுஞ் சேவலுமாய்க் கொண்டவேலா
நீறுபடை அசுரர்படை மாளச் செய்து
நினைந்துருகு மடியர்தமைக் காக்கும் கந்தா
வேறுகெதி யெமக்கில்லை விமலநாதா
பாலசுப்பிர மணியரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணரும் அடியவரும் வடந்தொட்டாட்ட
அன்னையருங் கன்னியரும் வடந்தொட்டாட்ட
இந்திரனும் சந்திரனும் வடந்தொட்டாட்ட
இந்துநுதல் உருவசியும் வடந்தொட்டாட்ட
செந்தமிழால் ஊஞ்சலிசை பாடுமன்பர்
திருவடியே தஞ்சமென வடந்தொட்டாட்ட
புந்திமகிழந் தூஞ்சல்மிசை இனிதமர்ந்து
பாலசுப்பிரமணியரே ஆடீரூஞ்சல்

அரவணையான் மால்மருகா முருகாவாழி
ஆறெழுத்து மந்திரமும் அறமும் வாழி
பரவுமடியார்களொடு பார்ப்பனரும் வாழி
பசுக்குலமும் பாவையாரும் பல்கிவாழி
விரவுகலை ஷானங்கள் விளங்க வாழி
வேதமொடு ஆறங்கம் விரைந்து வாழி
பரனமருள் பாலிக்கும் பாலையூற்றில்
பாலசுப்பிரமணியரே ஆடீரூஞ்சல்

**ஆக்கம்**
**சைவப்புலவர் பண்டிதர்**
**இ.வடிவேல் அவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

01. அரனார்தரு முருகா ஆறுமுகனே எச்சரிக்கை
பரமானந்த கடலேபால குமரா எச்சரிக்கை

02. குருவாய் வந்து குறைதீர்த்தருள் குகனே எச்சரிக்கை
அருவாய் அருவுருவாய்வரும் ஐயா எச்சரிக்கை

03. பண்ணார்மொழி மங்கைவள்ளி தெய்வயானை மகிழும்
கண்மூன்றுடைக் கடவுள்தரும் கந்தா எச்சரிக்கை

04. எண்ணாவரு சூரன்னுடல் ஈர்த்தாய் எச்சரிக்கை
விண்ணோர்சிறை மீட்டேயருள் விமலா எச்சரிக்கை

05. பாலைப்பதி தனில்மேவிய பாலசுப்பிர மணியா
வேலைக்கரத் தேந்திவிளை தீர்ப்பாய் எச்சரிக்கை

06. கோலமயில் ஏறிவரும் குகனே எச்சரிக்கை
ஆலமுண்ட கண்டன்மகிழ் குமரா எச்சரிக்கை

## பராக்கு

01. ஐந்துகர னுக்கிளைய ஐயா பராக்கு
ஆறுபடை வீடுடைய அரசே பராக்கு

02. முந்தைவினை தீர்த்தருளும் முருகா பராக்கு
செந்நிலம் பதியமர் செல்வா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பாலையம் பதியிலுறை பரனே பராக்கு
நீலமயில் வகனா நிமலா பராக்கு

04. காலையும் மாலையுங் கைதொழும் அடியார்
கவலைகள் தீர்த்திடும் கந்தா பராக்கு

05. கைலையங் கிரிவாசன் மைந்தா பராக்கு
கார்மேக வண்ணன்மால் மருகா பராக்கு

06. சூரனுடல் நீறுபடச் செய்தாய் பராக்கு
வீரவடி வேல்தாங்கி வருவாய் பராக்கு

## லாலி

01. லாலி லாலி லாலி லாலி லாலி
நீலமயில் வாகனனே லாலி லாலி

02. ஆலமுண்ட கண்டன் அருள் ஐயா லாலி
ஐங்கரனுக் கிளையவனே லாலி லாலி

03. பாலையூற்று பதியமர்ந்த பாலா லாலி
பக்தருக்கு அருள்புரியும் வேலா லாலி

04. சீலமொடு செல்வமெலாம் தந்தாய் லாலி
சிந்தைநிறை அருள்புரிய வந்தாய் லாலி

05. முந்தைவினை தீர்க்கவரும் முருகா லாலி
மூலமந்தி ரப்பொருளே லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. நைந்துருகும் அடியவரை நாளும் காக்கும்
ஞானவடி வேலவனே லாலி லாலி

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

01. பண்ணின்மொழி தெய்வயானை பாவை வள்ளி பாகருக்கும்
பாலையம் பதியிலமர் பாலசுப்பிர மணியருக்கும் (மங்களம்)

02. ஆறுபடை வீடுடைய ஆறுமுக வேலவர்க்கும்
மாறுபடு சூரனுடல் கூறுபடச் செய்தவர்க்கும் (மங்களம்)

03. சந்ததமுன் சன்னிதியில் வந்துவழி பாடுசெய்யும்
கந்தனடி யார்களுக்கும் கார்த்திகேய தாசருக்கும்
(மங்களம்)

04. மந்திரங்க ளோதிமலர் தூவுமுயர் வேதியர்க்கும்
சந்ததமுன் சேவைசெய்யும் தாசருக்கும் யாவருக்கும்
(மங்களம்)

ஆக்கம்
சைவப்புலவர். பண்டிதர்
இ.வடிவேல் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை பாலையூற்று
## அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமானின்
## தேரடிச் சிந்து

பாலையூற்றினிலே பாலசுப்பிரமணியப்
பெருமான் தேரில் வருகிறார் - அருள்மிகு
பெருமான் தேரில் வருகிறார்.

அப்பனும் அம்மையும் அருள்தரும் பூமியில்
செப்பிடும் செல்வங்கள் சேர்ந்த நற்பதியினில் (பாலை)

திருக்கோணமலையினிலே திகழ்ந்திடும் பாலையூற்றில்
திருவருள் பரிய வருகிறார் - முருகன்
திருவருள் புரிய வருகிறார்.

செங்கதிர் வேலவன் செந்தமிழ் நாயகன்
கங்கை அணிந்தவன் கண்ணில் பிறந்தவன் - (பாலை)

சூரர் குலப்படையழித்த சுப்பிரமணியரவர்
தீரர் நலம் விளங்க வருகிறார் - எங்கள்
தீரர் நலம் விளங்க வருகிறார்.

ஐங்கரன் தம்பியாய் அவனியில் வந்தவர்
பங்கைய மலரினில் பாலனாய் மலர்ந்தவர் - (பாலை)

வண்ணமிகு தேரினிலே வள்ளி தெய்வானையுடன்
கண்ணன் திருமருகன் வருகிறார் - காக்கும்
கண்ணன் திருமருகன் வருகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் சேனையின் இன்னல் துடைத்தவன்
சந்ததம் எண்ணுவோர் சங்கடம் தீர்ப்பவன் - (பாலை)

அடியார்கள் வடமிழுக்க அலங்காரம் தான் சிரிக்க
ஆறுமுகன்! அருளவருகிறார் - அழகு
ஆறுமுகன் அருளவருகிறார்

மங்கையர் கும்மிகோல் ஆட்டங்கள் ஆடிட
மங்கள வாத்திய கானம் முழங்கிட - (பாலை)

அழகுக்கு அழகான அழகு வடிவேலனவன்
உலகத்தைக் காக்க வருகிறார் - இந்த
உலகத்தைக் காக்க வருகிறார்

சக்தியின் திருமகன் வெற்றியைத் தருபவன்
இத்தரை எங்கிலும் இன்பமாய் இனிப்பவன் - (பாலை)

கலியுக வரதனவன் கண்கண்ட தெய்வமவன்
நலிவோரை காக்க வருகிறார் - துயரில்
நலிவோரை காக்க வருகிறார்

மண்ணோரும் விண்ணோரும் வாழ்த்தி வணங்கிட
எண்ணில்லா இன்பங்கள் எங்கும் நிறைந்திட - (பாலை)

**ஆக்கம்**
**கவிஞர், சோதிடர்**
**வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை பாலையூற்று
## அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான்
## காவடிப் பாடல்கள்

கற்பகத்தின் தருவாக திகழுமெங்கள்
கணபதியே உந்தனது கருணை கொண்டு
பற்பலரும் போற்றுமுயர் பாலையூற்று
பதியிலுறை பாலசுப்பிரமணியர் மீது
அற்புதமாய் பாடல்களை அடியேன் பாட
அழகு தமிழ் வார்த்தை பொருள் வந்து சேர
நற்குஞ்சரக் கொழுந்தான நாதா உந்தன்
நல்லருளை தந்தெனக்கு அருள் செய்வாயே (1)

காலையிளம் கதிர்போல கண்ணை ஈர்க்கும்
கட்டழகு குறையாத குமார வேலா
சோலையிளம் வள்ளியினைக் கரம்பிடிக்க
சுடராகக் கானகத்தில் நின்ற தேவா
ஆலைகளும் சாலைகளும் சிறந்திருக்கும்
அழகான கோணேஸர் புகழிருக்கும்
பாலைமிகு பாலையூற்றுப் பகுதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (2)

கிட்டவரும் வினைதுயரை தடுத்து நின்று
கிரபையினால் அடியவரை வாழ வைத்து
பட்டதெல்லாம் செழித்தோங்க மழையைத் தந்து
பசுமையுடன் வையகத்தில் வளங்களீந்து
தொட்டதெல்லாம் துலங்க தூய உந்தன்
திருவடியைத் தினந்தொழுது வேண்டி வந்தேன்
மட்டில்லா பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதங்கள் நாதங்கள் எல்லாமுந்தன்
கருணையருட் கடலான அமுதேயப்பா
வேதங்கள் விளக்கங்கள் யாவுமுந்தன்
வேல் தந்த ஞானத்தால் விளைந்ததப்பா
மாதங்கள் காலங்கள் அனைத்துமுந்தன்
மயிலாடும் அழகினிலே மாறுதப்பா
பாதம்பணி பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (4)

குருவாகி தத்துவங்கள் உரைத்த சீலா
குன்றுகளில் குடியமர்ந்த கருணை நாதா
உருவாகி வருகின்ற உலகைக் காக்கும்
உயர்வான கலியுக வரதா கந்தா
கருவாகி வருகின்ற கவிதைக்கெல்லாம்
களமான தமிழ்தந்த கங்கைபாலா
பெருமைமிகு பாலையூற்றுப் பகுதியில் வாழும்
பாலசுப்பிரமணழயப் பெருமானே அருள் செய்வாயே(5)

கூத்தாடும் ஈசனது நெற்றிக்கண்ணில்
கொதித்தெழுந்த தீப்பொறியாய் குளத்தில் வீழ்ந்து
ஆத்தளாம் அம்பிகையின் அரவணைப்பில்
ஆறுமுகம் ஒன்றான அழகுரூபா
மூத்தவனாம் ஐங்கரனின் தம்பியாக
முத்தழகுப் பெருமானே வேண்டுகின்றேன்
காத்தருளும் பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியம் பெருமானே அருள் செய்வாயே (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டவரும் உன்னருளால் திருத்த வேண்டும்
கேடின்றி வாழ வழிகாட்ட வேண்டும்
முட்டவரும் பகை நெருப்பு மறைய வேண்டும்
மூதமிழர் உரிமையுடன் வாழ வேண்டும்
விட்டகுறை தொட்டகுறை விருத்தியாகி
வெற்றியுடன் சிறக்க வழி செய்ய வேண்டும்
திட்டமுள்ள பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (7)

கேட்டவர்க்கு கேட்ட வரம் கொடுக்கும் வேலா
கதியென்ற ஏழையெனைக் காண வா, வா
வாட்டமுடன் வாழுமிந்த வாழ்வை மாற்றி
வற்றாத வரங்கள் தர விரைந்து வா,வப
நாட்டமுடன் வருவோர்க்கு நலங்கள் நல்கும்
நாயகனே உனதடியை நாடி வந்தேன்
பாட்டுறும் பாலையூற்றுப் பகுதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (8)

கைதனிலே வேல் கொண்டு வினையழிப்பாய்
கந்தனென்று வருவோர்கள் கவலை தீர்ப்பாய்
நெய்தனிலே விளக்கேற்றி நெஞ்சில் வைத்து
நிதம் தொழுவோர் நலம் விளங்கக் கருணை செய்வாய்
பொய்தனிலே தினம் கிடந்து புண்ணாகாமல்
பொற்பாத கமலத்தைப் போற்றி வந்தேன்
மெய்யான பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவனே பலநூறு பெருமையெல்லாம்
கொடுப்பவனே அடியவர்க்கு வரங்களெல்லாம்
கண்டவனே பலகோடி பக்தரெல்லாம்
காப்பவனே கலியுகத்தில் வையமெல்லாம்
தொண்டர் குலம் பலர்தேடும் தெய்வமான
தேவர்கள் தளபதியைத் தேடிவந்தேன்
வண்டமிழர் பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (10)

கோயில்களும் சீர்வளமும் சூழ்ந்திருக்கும்
கோணமலை ஈசனருள் சேர்ந்திருக்கும்
தாயருளும் சேயருளும் நிறைந்திருக்கும்
தட்ஷணகைலாயமெனும் தலமிருக்கும்
தூயஉனை தொழுதேற்றிப் பாடிவந்தேன்
துணையாக வந்தெனக்குப் பாதை காட்டி
நேயமிகு பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (11)

**ஆக்கம்**
**கவிஞர் சோதிடர்**
**வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடுவோர்க்கருளும் பாலமுருகா

### பல்லவி

பாடுவோர்க்கருளும் பாலமுருகா (பாலையூற்று)
பாலையூற்று பதியுறை அழகா

### அநுபல்லவி

தேடுவோர் விழியில் தெரிந்திடும் குமரா
திருக்கோணமலையைக் காத்திம் தீரா (தேடுவோர்)

### சரணங்கள்

கதிர்காம அடியார்கள் கையிலே வந்து
கதிர்வடி வேலாய் காட்சியும் தந்து
பதியான பாலையூற்றிலே அமர்ந்தாய்
பலநூறு அற்புதம் நிகழ்த்தியே மகிழ்ந்தாய் (பாலையூற்று)

ஆடல் நாயகன் அருட்கோணேசன்
ஆதி அந்தம் இல்லாதஈசன்
பாடல்கள் பதிகம் பெற்றிட்ட ஊரில்
பக்தர்க்கு அருள வருவாயே நேரில் (பாலையூற்று)

சுப்பிரமணிய பெருமானே கந்தா
தினந்தோறும் உன்னைப்பாடிட வரம் தா
அப்பனுக்கன்று குருவான வேலா
அடியார்க்கு தேடும் அருள்மிகு சீலா (பாலையூற்று)

செந்தமிழ் தலைவா திருமலை இறைவா
சொந்தங்கள் வாழ விடிவினைத்தா தா
எந்தமிழ் மாந்தர் இன்னல்கள் நீங்க
இருகரம் கூப்பி அழைக்கிறேன் வா வா (பாலையூற்று)

**ஆக்கம்**
**கவிஞர் சோதிடர் :- வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்றுப்பதி அமர்ந்தோனே

**பல்லவி**

பாலையூற்றுப்பதி அமர்ந்தோனே
பாலதண்டாயுத வேலாயுதனே (பாலையூற்று)

**அனுபல்லவி**

காலனை உதைத்த ஈசன் மகனே
காரணம் உணர்ந்த கருணாகரனே (காலனை)

**சரணங்கள்**

கலியுகவரதா கதிர்காமவாசா....
கையேந்தி அழைத்தேன் காத்தருள் நேசா...
நலிந்தோர்கள் வாழ நல்லருள் புரிவாய்
நல்லதோர் விடிவை எமக்காகத்தருவாய் (பாலையூற்று)

ஞாலத்தை அளந்த மாயவன் மருகா
ஞானப்பழமாய் நின்றவேல் முருகா
காலத்தை அறிந்த கார்த்திகை பாலா
கண்கவர் கோணமலையுறை சீலா (பாலையூற்று)

வையகம் போற்றும் வானவர்த்தலைவா
வணங்கிடுவோர்க்குவரம் தரும் முதல்வா...
தெய்வானைவள்ளி தேடிய நாதா
தேவரை காத்த தேவாதி தேவா (பாலையூற்று)

அப்பனாம் கோணேசர் மலையிருக்க
அன்னையும் அண்ணனும் அருகிலே இருக்க
எப்போதும் எங்களைக் காத்திடும் குகனே
எண்ணுவோர்க்கருள்வாய் மூவிருமுகனே (பாலையூற்று)

**கவிஞர் சோதிடர் :- வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலசுப்பிரமணியப் பெருமானே

### பல்லவி

பாலசுப்பிரமணியப் பெருமானே - உனை
பாலையூற்றுப் பதியில் கண்டேனே (பாலசுப்பிரமணிய)

### அனுபல்லவி

வேலாக வந்து உறைந்தவனே - தினம்
வேண்டுவோர் தம்மை அறிந்தவனே (வேலாக)

### சரணங்கள்

ஆலகண்டன் மகனே ஆறுமுகனே - அன்னை
ஆதிசக்தி அழகுத் திருமகனே
காலமெல்லாம் உனைப் பணிந்தேனே - தமிழ்
கவிதைகளால் பாடி மகிழ்ந்தேனே (பாலசுப்பிரமணிய)

கோல வடிவான கதிரேசா - வள்ளி
குறமாது தெய்வானை பதிநேசா
நீல வண்ண நெடுமால் மருகோனே - வண்ண
நீல மயில் ஏறி அருள்வாயே (பாலசுப்பிரமணிய)

மூல விநாயகனின் சோதரனே - உயர்
முத்தி சுகமெல்லாம் தருவோனே
ஞாலமெல்லாம் தலங்கள் உடையவனே - என்றும்
ஞானப்பழமாக திகழ்பவனே (பாலசுப்பிரமணிய)

தட்சண கைலாய பூமியிலே - உன்
தரிசனம் பெறுவார் வாழ்க்கையிலே
நிச்சயம் நன்மைகள் நடந்தாகும் - உனை
நினைப்பவர் துயரம் பறந்தோடும் (பாலசுப்பிரமணிய)

**கவிஞர் சோதிடர் : வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையூற்று பதியுறை வாசா......

## பல்லவி

பாலையூற்றுப் பதியுறை வாசா - உன்
பதமலர் பணிந்தேன் அருட்குமரேசா (பாலையூற்று)

## அனுபல்லவி

வேலைப்பிடித்த வெற்றிவேல் கந்தா - என்
வேண்டுதலேற்று நீயொரு வரம் தா (வேலைப்பிடித்)

## சரணங்கள்

காலைப்பிடித்தேன் கருணாகரனே - எமை
காத்தருள் புரிவாய் சிவனுடை மகனே
மாகைக்கதிர் போல் மங்கள ரூபனே - அன்பர்
மனங்களில் வாழும் மயில் வாகனனே (பாலையூற்று)

தந்தைக்கு மந்திரம் சொன்னவன் நீயே - இந்த
தரணியில் உயிரெல்லாம் உன்திருச்சேயே
சிந்தைக்கு எட்டா சிவகுருநாதா - அருள்
சித்தர்கள் போற்றும் ஆறுமுக தேவா (பாலையூற்று)

அருளாளர் பாட்டிற்கு அருளிய முருகா - பல
அடியார்கள் வாழ்வை உயர்த்திய குமரா
கருணையில் மிகுந்த கலியுகவரதா - உயர்
கலைகளாய் விளங்கும் கார்த்திகை பாலா (பாலையூற்று)

உனக்கென உலகில் தலம்பல உண்டு - என்றும்
உயர்வினை தருமே உன்திருத் தொண்டு
தனக்கென வாழும் உன் சிறுபிள்ளை - உன்
திருவடி பணிந்தேன் அருளுவாய் அருளை (பாலையூற்று)

**கவிஞர், சோதிடர் : வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திக்கு முதல்வா முருகையா.......

பல்லவி

முத்திக்கு முதல்வா முருகையா - உன்
மலரப்பதம் பணிந்தேன் அருளையா

(முத்திக்கு)

அனுபல்லவி

பக்தர்கள் தேடும் குமரையா - உயர்
பாலையூற்று பதி வேலையா - (2)

சரணங்கள்

சித்தர்கள் நாடிவரும் சிவனுமைமகனே - பல
சிறப்புகள் கொண்ட அருள் திருக்குகனே
சத்துரு சங்கார சண்முகா கந்தா - எங்கள்
சந்ததி வழிப்படும் செந்தமிழ் செல்வா

(முத்திக்கு)

தித்திக்கும் தமிழால் உனைப்பாடி - நான்
தினந்தோறும் வருவேன் தனைத்தேடி
எத்திக்கும் உந்தன் பெருமைகளை - நான்
இயம்பிட தருவாய் திருவருளை

(முத்திக்கு)

என்னுயிர் வாழ்க்கை நீயெனஆனாய் - இங்கு
எனக்கெது வேண்டும் நீதானறிவாய்
உன்னடி சேரும் அந்நாள் வரைக்கும் - இந்த
அடியவன் மனது உன்னையே நினைக்கும்

(முத்திக்கு)

இடையூறுவந்து இடைமறித்தாலும் - என்
இருகரம் என்றும் உன்னையே துதிக்கும்
தடைகளைத் தகர்ப்பாய் தர்மத்தின் தலைவா
தன்னருள் புரிவாய் தமிழர்தம் இறைவா

(முத்திக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

## திருச்சிற்றம்பலம்

ஒளிக்கு மிருளுக்கும் மென்றே விமென்று மேலிடியொன்
றொளிக்கு மெளினிமிருன ராதுன் ளுயிருக் குயிராய்த்
தெளிக்குமறிவு திகழ்த்துள் தேனுக் திரிமாத்தே
குளிக்கு முவிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருமணம் வெளியே திரவே - தருளாளா
நீயுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற்கொடி

வாக்காலு மிக்க மனத்தானு மெக்காலுந்
தாக்கா துணாவரிய தண்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிறியாமை தானே
குறிக்குருணல்க் கொடி

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பொருவெழுத்தும் நெஞ்சமுத்தியப்
பேசுமெழுத்துடனே பேசா வெழுத்தனையுங்
கூசாமற் காட்டக்கொடி

அந்த மலமறுத்திங் கண்மானவக் காட்டியதற்
கந்த அறிவை அறிவித்தல் - சிந்தறிவை
மாறாமல் மாற்றி மருவு சிவப்பேதென்றுங்
கூறாமல் கூறுங்கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்
(தில்லையில் அருளியது - அறுசீரிய விருத்தம்)

முத்துநல் தாழம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்வதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

சுந்தர நீறணந் தும்மெழுகித்
தூயுபொன்சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தார் கோன் அயன் தன்பெருமான்
∴அழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கோய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கரையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்பொற் கோயில்பாடிப்
பாசவினையைபட பறிந்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே

அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே

உலக்கை பல ஓச்சு வார்பெரியர்
உலகமெல்லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருமுருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்ததம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகமெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே

வாள்தடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவாளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தழலஙடகச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கோண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைப் பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கையற் கண்பனி ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே

மையமர் கண்டவனை வானநாடர்
மருந்தின ராணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்கட்குத்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடையக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை அரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நத்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும் வந்தன்பர்தம்போ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்துநாமே

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேன்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமதிப் பிள்ளைபாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்துநாமே

அயன்தலை கொண்டு செண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுதென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுகணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைமேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்தும்நாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதிய மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமு மாய் விடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே

ஆக்கம்
கவிஞர் சோதிடர்
வி.சிகண்டிநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலையூற்று

அருள்மிகு ஸ்ரீ பால சுப்பிரமணியப்

பெருமான் தேவஸ்தானம்

SSDIGITAL S 0777695636

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org